International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# செந்தூரச்சாரல் நாவலில் வாழ்வியல் சிக்கல்கள்

**ரா. சக்தி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
பெரியார் பல்கலைக்கழகம் சேலம்.11

**முனைவர் த. மு. ஆனந்த்**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
ஸ்ரீ மூகாம்பிகை கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
மல்லுப்பட்டி, பாலக்கோடு 636 805

**முன்னுரை**

அடித்தட்டு மக்களின் பல்வேறு இன்னல்களை யதார்த்த நடையுடன் வட்டார மொழியில் வெளிப்படுத்தியவர் சி.ஆர். ரவீந்திரன் அவர்கள். துன்பம், பசி, மனிதனின் மனவலி, ஏழையின் காதல், பொருளாதார சிக்கல்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான அடுக்குமுறை, பொருளாதார ஏற்ற தாழ்வுகள் மற்றும் விளிம்பு நிலை மக்களின் வறுமை ஆகியவற்றை தன் படைப்புகளின் மூலம் கொங்கு பகுதியின் பல்வேறு இனக் குழுவினரின் வாழ்க்கையை பிரதிபலிப்பதாக செந்தூரச் சாரல் நாவல் அமைந்துள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்கள் ஏராளமான துன்பங்களையும் சுமைகளையும் பொறுத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். எம்.ஜி.ஆர்.நகர் மக்கள் வீடு இன்றி தவித்தல், பிள்ளைகளை பறிகொடுத்தல், பெண் சார்ந்த சிக்கல்கள் ஆகியவற்றை மிக நுட்பமாகவும் தெளிவாகவும் சி.ஆர்.ரவீந்திரன் இந்நாவலில் வெளிப்படுத்தியமையை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**உழைக்கும் தொழிலாளர்களின் சிக்கல்கள்**

மனித வாழ்க்கையில் அடித்தட்டு மக்களின் வரலாற்று பிரதிநிதித்துவம் ஆளும் ஆதிக்க வர்க்கத்தினரின் சட்டத்துக்குள்ளையே வரையறுக்கப்பட்டு இருந்தது என்ற கூற்று உண்மையான தாகும். சங்க காலத்தில் உழவே தலைமையான தொழிலாக விளங்கிற்று.மன்னரின் வெற்றி உழவரின் கலப்பையை நம்பி இருந்தது என்பதை **“பொருபகைத் தரூஉங் கொற்றமும் உழுபடை ஊன்று சால் மருங்கின், ஈன்றதன் பயனே”** (புறம். 25) என்ற சங்கப்பாடல் உணர்த்துகிறது.

**வேதகால இந்தியாவில் “தாஸர்” என்ற சொல்லிற்கு அடிமை என்பது பொருள். அடிமைகளை படியான், அடியான், பண்ணையாள், கொத்தடிமை என தமிழில் கூறுவர்”.** மக்களில் விவசாய தொழில் செய்பவர்கள் தான் பலர் அடிமைகளாக வாழ்ந்தனர். அவர்களை விலைப் பொருளாகக் கருதி வாங்குவதும் விற்பதும் வழக்கிலிருந்து **“அடிமைகள் பல வகையாக இருந்தனர் என்பதை சோழர் காலத்தில் இருந்தே அறிய முடிகிறது”.** உழைக்கும் தொழிலாளர்களாக ஆரம்ப காலத்தில் இருந்த புலையர், வேடர் போன்ற சாதியினர் பெரும்பாலும் அடிமைகளாக இருந்தனர். இவர்கள் பதினாறாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் விவசாய வேலைக்காக அடிமைகளாக வாங்குவது என்ற நிலை இருந்தது.

> **“மண்மீதில் உழைப்பாரெல்லாம்**
> **வறியராம்! உரிமை கேட்டால்**

**உன் மீது அன்பு பாய்ச்சும்**

**புலையர்செல் வராம் இதைத்தம்"** (பாரதிதாசன் பாடல்கள், பா.1)

என்னும் பாடல் உழைப்பவரெல்லாம் வறியவராய் உள்ளனர். உழைப்புக்கேற்ற ஊதியம் பெறுவது அவரவர் உரிமை. இவ்வுரிமையை தன் முதலாளி களிடம் கேட்டால் அவர்களை எதற்காக கேட்டோம் என்ற எண்ணம் தோன்றும் அளவிற்கு கொடுமைப்படுத்துவர் என்று உழைப்பவர்களின் வாழ்க்கையைக் கூறுகிறது. இப்படிப்பட்ட வாழ்வியலை இந்நாவல் மாகாளி என்ற கதாபாத்திரத்தின் மூலம் எடுத்துரைக்கிறது.

மாகாளிகள் என்று அழைக்கப்படுபவர் செங்கல் சூலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் கூலி குறைவாக கொடுத்ததால் அவர்களிடம் கூறாமல் அங்கிருந்து ஓடி வந்து விட்டார்கள். அதனால் அவர்களைப் பிடித்து வரும்படி முதலாளி கதர் சட்டைக்காரர்களை அனுப்பி இருந்தார். சந்தையில் மாகாளிகள் இருப்பதை அறிந்தவர்கள் அவர்களை இழுத்து வந்து கைகளை பின்பக்கமாக கட்டி அறைந்த சத்தம் அனைவருக்கும் கேட்டது. இந்த செய்தியை முத்தானிடம் கேட்டறிந்த வேலுச்சாமி மாகாளிகள் கட்டப்பட்டிருந்த இடத்திற்கு வந்து, அவனுகளெ உட்டுடுங்க! அவனுக கணக்கை நாந் தீக்கறன்!" வேலுச்சாமி சொல்லவும் கூட்டம் அவருடைய முகத்தைக் கூர்ந்து பார்த்தது.

கதர் சட்டைக்காரர்கள் அதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. "ஏன்டா, ஓடியாந்தீங்க! "திரும்பவும் வேலுச்சாமி கேட்டார். "சாமி, கூலி கொறைவாக் குடுத்திருக்கிறாங்க! அதெ வெச்சுட்டு பொழைச்சிக் கடனெ எப்படி அடைக்கிறதுன்னு ஓடியாந்திட்டங்க! பக்கத்தில் நின்றிருந்த மாகாளி தான் சொன்னான். "என்ன கூலி குடுக்குறாங்க!"

**"நாப்பது ரூபாய் சோறு திங்கறதா, கடங்கட்டற தான்னு தெரியல ஓடியாந்துட்டமுங்க! சாமி! அடிபட்டவர்களில் உயரமானவன் சொன்னான். இதைக் கேட்ட வேலுச்சாமி, "நான் எழுபத்தஞ்சு ரூபா தர்றேன் வேலை செய்யறீங்களா? செய்யறமுங்க** என்று மாகாளிகள் கூறியதும் அதற்கு வேலுச்சாமி மலையடிவாரத்தில் சூலை இருக்கு அங்கேயே சாளக்கொட்டம் கட்டியிருக் கிறேன். நீ உன் குடும்பத்தோடு அங்கேயே தங்கிக் கொள். ஊர்பக்கம் எல்லாம் வரக்கூடாது என்று கூறிவிட்டு அட்வான்ஸ் நான் கொடுத்துர்றே என்றதும் சரிங்க சாமி என்கின்றனர் மாகாளிகள்.

**"செல்வமுடையவன் இல்லாதவரை வாழவைக்க வேண்டும் என்பது வாழ்வியல் உண்மை"** என்ற கருத்திற்கு ஏற்ப முதலாளிகள் என்போர் உழைக்கும் தொழிலாளர்களின் உழைப்பை மதித்து அவர்களின் பொருளாதார நிலையை மாற்ற வேண்டும். ஆனால், மேல் நிலையில் உள்ளோர் "விளக்குத் தண்டைப்போன்று" நாகரீக விளக்கினை தலையால் சுமந்து கொண்டு இக்கூட்டம் இருக்கிறது. விளக்கை சுமப்பவர் மீது எண்ணெய் கசிந்து கொண்டிருக்க மேல்நிலை மக்கள் விளக்கின் ஒளியை பெறுகின்றனர் என்று தாகூர் கூறுவது போல தான் இந்த மாகாளிகளின் வாழ்க்கை. இவர்களின் உழைப்பு முதலாளிகளின் முன்னேற்றம் என்பதை இதன் மூலம் நம்மால் அறிய முடிகிறது.

**பெண் சார்ந்த சிக்கல்கள்**

சங்ககாலத்துக்கு பின்னர் பெண்ணின் நிலை படிப்படியாகத் தாழ்ந்து இருபதாம் நூற்றாண்டில் மீண்டும் முன்னேற்றம் கண்டது. சங்ககாலத்தில் பெண்கல்வி மேலோங்கி இருந்தது. ஔவையார், வெள்ளிவீதியார், குறமகள் குறி எயினி போன்றோர் கல்வியில் புலமைப் பெற்று விளங்கினர். பெண்கள் ஆண்களைச் சார்ந்து வாழ்வது தவிர்க்க இயலாததாக இருந்தது. ஆனால் பெண்களை அடிமைகளாக நடத்த வில்லை பெண்களுக்கு தன் கணவரே உயிர் என்கிறது சங்க இலக்கியம்.

இவ்வாறு இருந்த பெண்கள் கணவனை இழந் தால் துன்புறுவாள். அஃது இன்றும் உள்ளது. தலையை மழித்தலும், வளையல் முதலிய அணிகளை நீக்கி விடுதல் போன்றவற்றை சிலர் பின்பற்றுகின்றனர். சில பெண்டீர் உடன்கட்டை ஏறினர். இவ் உடன்கட்டை ஏறுதல் என்பது அரசர்க் குடும்பத்தினருக்கு சிறப்பு பண்பாக கருதப்பட்டது. **பூதப்பாண்டியன் மனைவி பெருங் கோப்பெண்டு தீப்புகுந்ததைப் புறநானூறு பேசியுள்ளது.**

பெண்கல்வி கற்றால் அனைத்தையும் பெறுவாள். இந்த உலகம் சிறக்க வேண்டுமெனில் பெண் கல்வி என்பது இன்றியமையாதது. குறிப்பாக கிராமப் பெண்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும்.

**"பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம் பேதமை யற்றிடும் காணீர்."** என்று பெண் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறார் மகாகவி பாரதியார்.

கலாவதி கீழ்சாதிப்பெண் அவள் கல்லூரிக்கு சென்று மாலை வீடு திரும்பாததற்குக் காரணம் என்னவாக இருக்கும் என அவளது தாய் படும்

பாடு சொல்லிலடங்கா. அவளின் கற்பனைகள் உருவகங்கள் எல்லை இல்லாமல் சென்ற நிலையில் வீட்டிற்கு வருவதை காணுகையில் ஏற்படும் மகிழ்ச்சிக்கு தாயின் உண்மையான அன்பு காரணம்.

“ஐடகம் காது, மா புள்ளக்காயி கலா உக்க ஒச்சலேது, நேரு ஏமி சேத்துவு பகவானே!” பொம்மி முந்தானையை வாயில் வைத்த படி விசும்பினாள்.

“கம்முனு கூசுகுன்டு, நேனு பொய்யி சூசிக்குனு ஒச்சேவு”. அவன் திரும்பவும் செருப்புகளை மிதித்தான்.

**“பகவதி! மாகாளி! பிள்ளக்காயி எக்கட போடுசுனோ?”** அவன் தனக்குள் புலம்பி கொண்டே நடந்தான்.

முத்தான் பேருந்து நிறுத்தத்திற்கு சென்றதும் கடைசி பேருந்து வந்ததில் கலா முக்காடு போட்டு கொண்டு வந்தாள். பஸ் ஆக்சிடெண்ட் ஆனதும் ஆஸ்பத்திரியில் இருந்து தான் வந்ததாக கூறியதை கேட்ட பொம்மி, **“அந்த மாகாளி எம் மவள காப்பாத்தி ஊடு கொண்டாந்து சேத்திட்டா”! பொம்மி இரண்டு கைகளையும் கூப்பி நெஞ்சில் வைத்து கண்களை மூடினாள்.**

இவ்வாறு கீழ்ச்சாதியில் பிறந்த பெண்கள் கல்வி கற்பதால் வாழ்வில் முன்னேறலாம் என்று நினைக்க அவளை சுற்றி இருக்கும் சூழ்நிலை அவளை எவ்வாறு தடுத்தாட்கொள்கிறது என்பதை இந்நாவலின் வழி அறியலாம்.

இது மட்டுமல்லாது ஒடுக்கப்பட்ட பெண்கள் கல்வி கற்க இயலாத சூழலில் காதலுக்கு உரிமை உண்டோ என்ற நிலை உள்ளது. தலைவனும் தலைவியும் வெவ்வேறு சாதியினர்கள் இவ்விரு வரும் கலப்பு மணத்தை புறமணதிற்கு சான்றாக கொள்ளலாம்.

**“சக்கிலிச்சி காதல் சர்க்கரையா இனிக்குதா”?**

என்ற வரிகளின் மூலம் காதல் என்று வரும்போது சாதி தெரிவதில்லை சர்க்கரையைப் போல இனிக்கிறது. ஆனால், திருமணம் என்று வரும்போது மட்டும் கசப்பாகி கண் முன் தெரிகிறதா சாதி என்று முத்துப்பொருநன் தன் கவிதை மூலம் வெளிப்படுத்துகிறார்.

சேகர் என்பவன் ஒடுக்கப்பட்ட பெண்ணான லட்சுமி உடன் காதல் கொண்டு நெருங்கிப் பழகி, பின்பு இதற்கெல்லாம் நான் காரணமில்லை என்று ஓடுவதும், திருமணம் செய்தும் அவளுடன் முறையாக குடும்பம் நடத்தவில்லை என்பதை பற்றியும் ஆசிரியர் இந் நாவலில் இங்ஙனம் கூறுகிறார்.

பழனியப்பன் தன் மகன் சேகர் செய்த செயலை தன் சகோதரரான வேலுச்சாமியிடம் கூறியதும், “திக்கெனப்பட்டது வேலுச்சாமிக்கு என்ன செய்வ தென்று தெரியவில்லை. பழனியப்பனும் சுப்பாத்தாளும் தலை குனிந்த படி இருந்தார்கள்.

“காசு பணங்குடுத்து களைச்சிப் போடச் சொல்றது” அப்படியெல்லாம் செஞ்சா உசுருக்கு ஆபத்துன்னு டாக்டர் சொல்றானாம்.

“அதுக்குத்தா உன்னெ ஒரு ஓசன கேட்டே “காதுங்காது அறியாமெ எங்கியாவுது கூட்டிட்டு போயிக் கொஞ்ச நாளைக்கு இருக்கச் சொல்லுங்க! வம்பு தும்பு பண்ணுனாப் புள்ளையெ உசுரோட கண்ணுல பாக்க முடியாதுன்னு சொல்லுங்க”!

**“புள்ளையெக் கண்ணாலங் கட்டி கூட்டிட்டு போங்கன்னு ஒத்தக்கால்லெ நிக்கறாங்க! போலீசுக்கு போகப் போறாங்களாம்”** என்ற காட்சியானது காலம் மாறினாலும் பெண் மீது இருக்கும் பேதம் மட்டும் மாறுவதில்லை என்பதை காட்டுகிறது. இச்சமூகத்தில் பெண்ணின் மீது திணிக்கப்படும் கட்டுப்பாடுகள் அவளை பெரிதும் பாதிக்கின்றன. இவ்வாறு ஒரு பெண் கல்வி கற்பதற்கும் காதலை அடையவும் போராடுவதோடு அவள் எல்லாவற்றுக்கும் போராடியே தன் வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற சூழல் சமுதாயத்தில் நிலவுகிறது என்பதை ஆசிரியர் இந்நாவலில் அழுத்தமாக வெளிப் படுத்துகிறார்.

**அடித்தட்டு மக்களின் வாழ்வியல்**

உயர்ந்த சாதிகளுக்கு எதிராக வளங்களை பெற முடியாமல் உணவு, உடை மற்றும் கல்வி ஆகியவற்றைக் குறைவாகப் பெற்று வாழும் மக்களை அடித்தட்டு மக்கள் என்பர். சாதி, தொழில், பொருளாதார நிலை ஆகியவற்றைக் கொண்டு இவர்களை அடித்தட்டு மக்கள் என்று வரையறை செய்யலாம். பெரும்பாலும் அடித்தட்டு மக்கள் என்று பறையர், பள்ளையர்களைக் கூறுவது வழக்கமாக இருந்தது. இதில் பள்ளர்களை

**கடிமலர் களைந்து முடிநாறு அழுத்தித்தீ
தொடிவனைத் தோளும் ஆகமும் தோய்ந்து
சேறாடு கோலமொடு வீறு பெறத் தோன்றிச்
செங்கண் நெடுங்கயில் சின்மொழிக் கடைசியர்
வெங்கண தொலைச்சிய விருந்தினி பாணி**

(சிலம்பு 10:127-131) என்கிறது.

அதாவது விவசாய தொழிலில் தனது முழு

உடல் உழைப்பையும் கொண்டு ஈடுபட்டவர்கள் கடைநிலை மக்கள் என்பதே கடைசியர் (பள்ளர்) என்ற சொல்லால் புலனப்படுகிறது. பள்ளர்கள் என்போர் தாழ்ந்த வகுப்பைச் சார்ந்தவர்கள். இவர்கள் நிலஉடைமையற்ற விவசாயக் கூலிகள். பள்ளர்களின் பிரிவுகளில் வரும் மாதாரிகள் 'பண்ணையார்கள் மற்றும் அதிகாரம் படைத்தவர் களால் ஒடுக்கப்படுவது பற்றி இந்நாவல் வெளிப் படுத்துகிறது. முதலாளிகளின் கெடுபிடிகளில் சிக்கிக்கொண்டு ஏழை தன்பிள்ளைகளை பறிகொடுத்து விட்டு நடையாய் நடந்து கோர்ட்டுக்கும் வீட்டிற்குமாய் நியாயம் கேட்டு போராடி கிடைத்த பணத்தைக் கூட முழுமையாக பெற முடியாமல் ஏமாற்றப்பட்டு துன்பப்படும் நிகழ்வு.

"அல்லற்றபட்டு ஆற்றாத கண்ணீர்" (குறள்.555) என்று குறளுக்கு ஏற்ப மருதன் தன் இரு பிள்ளைகளான கண்ணன் சக்தி ஆகியோரைப் பறிகொடுத்தான்.

**"எம்.ஜி.ஆர். நகருக்கு வருவதற்கு முன்னால் பலதரம் அவர்களுடைய குடிசைகளுக்குள் டெம்போ புகுந்ததுண்டு. லாரிகளும் கார்களும் கூட குடிசைகளை இடித்து தள்ளி விட்டு நிற்கும்".**

இவ்வாறு இருக்க ஒரு நாள் தன்னுடைய கடைசி பையன் கண்ணன் அடிபட்டு அதே இடத்தில் செத்துப் போனான். பின் கோட்டு கேஸ்ன்னு அலைந்து நியாயம் கிடைத்தது. அந்த வலி மறைந்து கொண்டிருக்கும் நேரத்தில் அன்னையரிடத்தில் மருதனின் நான்காவது மகன் சக்தியை மணல் வண்டி ஏற்றிக் கொன்று விட்டனர். பின் இதற்காகவும் மருதன் அலைந்து கேசில் ஜெயித்து பணமும் கிடைத்தது. ஆனால் பிரசிடெண்ட் அந்த பணத்தை முழுமையாக கொடுக்காமல் நான்கு நூறு ரூபாய் மட்டும் கொடுத்து அவரை ஏமாற்றி விட்டார். இதையெல் லாம் தெரிந்தும் தெரியாமலும் பயந்து கொடுத்ததை வாங்கிக் கொண்டு சென்றான் மருதன். இதைப் போன்று மாதாரிகளின் வாழ்வு மிகவும் கொடுமையானது. தன் பிள்ளையின் இறப்பிற்கு கிடைத்த பணத்தைக் கூட முழுமையாக பெற முடியவில்லை என்பதுதான் இவர்களின் வாழ்க்கை என்பதாக அடித்தட்டு மக்களின் வாழ்வியலை ஆசிரியர் கூறியிருக்கிறார்.

## முடிவுரை

இலக்கியங்களில் ஒடுக்கப்பட்டவர்களின் வாழ்வியல், பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் சிக்கல்கள் ஆகியவற்றை வெளிக் காட்டுவது இன்றியமையாத ஒன்றாக கருதப் படுகிறது. இதுபோன்ற ஆய்வுகள் அவர்களின் வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த இடமளிக் கலாம். விளிம்பு நிலையிலுள்ள சமூகப்பிரிவினர் ஒவ்வொரும் பல்வேறு முறையில் இன்னல்களைச் சந்திக்கின்றனர். இவர்கள் தங்கள் வாழ்வில் பொருளாதாரம் மற்றும் புறக் காரணிகளின் அடிப்படையில் தங்களை மேம்படுத்தி கொள்ள முயல்கின்றனர் என்பதை சி.ஆர்.ரவீந்திரன் அவர்கள் இந்நாவல் மூலம் எடுத்துரைக்கிறார் என்பதை அறியமுடிகிறது.

## துணைநூற் பட்டியல்

1. புலியூர்க் கேசிகன், புறநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை – 600014. பதிப்பு, 2015
2. இராமரத்தினம், குறுந்தொகை, சாரதா பதிப்பகம், தி.நகர், சென்னை-600017. பதிப்பு, 2006.
3. பாரதிதாசன் கவிதைகள், அருணா வெளியீடு, வில்லிவாக்கம், சென்னை-600049. முதல் பதிப்பு, டிசம்பர்-2008, 4-ஆம் பதிப்பு, ஏப்ரல்-2016.
4. முனைவர் க.பஞ்சாங்கம், இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர் – 613001. முதல் பதிப்பு, நவம்பர்-2011. 2-ஆம் பதிப்பு-2016.
5. டாக்டர் தா.ஏ.ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ஐந்திணை பதிப்பகம், மேற்கு அண்ணா நகர், சென்னை – 613001. பதிப்பு, 2016.
6. புலியூர்க் கேசிகன், சிலப்பதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை-014, 7ஆம் பதிப்பு, 2017.
7. சி.ஆர்.ரவீந்திரன், செந்தூரச் சாரல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை, பதிப்பு, 2011.
8. முனைவர் அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணை பதிப்பகம், மேற்கு அண்ணா நகர், சென்னை. பதிப்பு, டிசம்பர், 2016.
9. பாரதிதாசன், அழகின் சிரிப்பு கவிதை, செண்பகா பதிப்பகம், தி.நகர், சென்னை – 600017.
10. முனைவர் சுமித்ரா, பன்மணிப் பெட்டகம், டுடே பதிக்கம், சென்னை, பதிப்பு, 2020.